# பைந்தமிழ் இயக்கத்தின் மூன்றாமாண்டு தொடக்க விழா




விழாவில் பேசுகிறார் பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை இயக்குநர் (பொறுப்பு) ந.முருகேசுவரி.

திருச்சி மார்ச் 28: உலகத் தமிழ்க் கழகம் சார்பில் பைந்தமிழ் இயக்கத்தின் மூன்றாமாண்டு தொடக்க விழா, மகளிர் தினம் மற்றும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் வ.சுப. மாணிக்கனார், தி.க. சிவசங்கரனார் பிறந்த நாள் விழா பிஷப் ஹீபர் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காவல் ஆய்வாளர் ஜோசப் நிக்சன் தலைமை வகித்தார். பள்ளித் தலைமையாசிரியை ஞா. ஆனி கலாவதி, கு.ம. சுப்பிரமணியன் முன்னிலை வகித்தனர்.

பாவேந்தரின் 125-வது பிறந்த நாள், செண்பகத்தமிழ் அரங்கு புகழ்மலர், மகளிர் தின விழா என்ற பொருளில் த. மாரிமுத்து எழுதிய நூலை தமிழழகன் வெளியிட, முனைவர் ப. சுப்பிரமணியன் பெற்றுக்கொண்டார். பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை இயக்குநர் (பொ) ந. முருகேசுவரி மாண்பார் மங்கை என்ற தலைப்பில் உரையாற்றினார். இறைவனுக்கு நிகராகப் போற்றப்படும் பெண்கள் அடிமையராய், உரிமையற்றவராய் நாட்டில் இன்னும் நடமாட வேண்டிய நிலை உள்ளது என்றார். வழக்குரைஞர் சீ. ஜயராமன், ப.ராமதாசு உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர். இயக்கத்தின் துணை இயக்குநர் சொ.வேல்முருகன் நிகழ்வை தொகுத்தளித்தார்.